1972 ஏப்ரல் 4]

வாலாஜாப்பேட்டையில் கம்பளி நெசவுத் தொழிற்சாலை.

* 870 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாலாஜாப்பேட்டையில் கூட்டுறவுத் துறையில் ஒரு கூட்டுறவு கம்பளி நெசவுத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : வளர்ந்து வரும் தொழில் நிலவரத்திலே நமது அரசாங்கம் அக்கரை கொண்டு வருகிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக கம்பளத் தொழில் சீரும் சிறப்போடும் நடந்து வருகிறது. அதைத் தற்போது தனிப்பட்டவர்கள் நடத்துகிறார்கள். அதனால் தொழிலாளர்களுக்குப் பலன் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, அதைக் கூட்டுறவு முறையில் தொடங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு முறையில் தொழில் தொடங்க நம்முடைய அரசாங்கம் முழு ஒத்துழைப்புத் தரும். அதைத் தொடங்குபவர்கள் யார் என்பதுதான் பிரச்சினை. மாண்புமிகு அங்கத்தினர் போன்றவர்கள் அவருடைய தொகுதி இது போன்ற முயற்சி எடுத்தால் உதவி செய்யலாம். ஏற்கனவே இரண்டு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் கம்பளிக்காகத் தொடங்கப் பட்டு இரண்டும் நஷ்டத்தில் நடக்கின்றன.

தோவாளை வட்டத்துக்கு முன்சீப் கோர்ட்

* 871 வினா—திரு வி. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா ?

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை தாலூக்காவில் ஒரு முன்சீப் கோர்ட் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. ஜே. ஜேபஸ் : ஏற்கனவே தோவாளையில் ஒரு கோர்ட் இருந்தது ஆகவே, அரசாங்கம் மறு பரிசீலனை செய்து அங்கு ஒரு முன்சீப். கோர்ட்டை அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர்நீதிமன்றம் இப்போதைக்கு அந்த இடத்தில் நீதி மன்றம் தேவையில்லை என்று சொல்லியிருக்கி றார்கள். இருந்தாலும் இதைப் பற்றிப் பரிசீலிக்கும் கமிட்டிக்கு அனுப்பியிருக்கிறார்கள். கமிட்டி அறிக்கை வந்த பிறகு முடிவு செய்யலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டி போடப்பட்டு ஏறத்தாழ ஓராண்டுக் காலம் ஆகப் போகிறது. அந்த ரிப்போர்ட் எப்போது வரும் ? அதனுடைய அம்சங்கள் என்ன ?